18th March 1959]

11 per cent. Under the revised allocation the Southern States are given larger quota of raw film than what they were getting previously.

(c) This will be largely determined by the import policy of the Government of India.

Sri S. LAZAR : இந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தி செய்வதற்கு ஏதாவது திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அது எந்த நிலைமையில் இருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஊட்டியில் ஒரு பிலிம் பாக்டரி வைக்க வேண்டுமென்ற ஒரு யோசனை இருப்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்றே நினைக்கிறேன். அது இன்னும் முடிவு அடையவில்லை.

Sri N. K. PALANISAMI : 1954-க்கு முன்னதாக ஒப்பந்தப்படி பிலிம் கோட்டா கொடுக்கப்பட்டு வருகிறது. 1954-க்கு முன்பு ஏற்பட்ட கம்பெனிகளுக்கு அதற்கு முன்னதாக ஒத்துக்கொள்ளப்பட்டபடி கோட்டா கொடுக்கப்பட்டு வருகிறது, அதற்கு பின்னுடி ஏற்படுத்தப்பட்ட கம்பெனிகளுக்குக் குறைவாக கோட்டா கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே 1954-ம் வருஷத்திற்கு பிற்பட்டு ஏற்படுத்தப்பட்ட கம்பெனிகளுக்கும் அதிகப்படியாக பிலிம் கொடுக்க அரசாங்கம் முன் வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN: அப்படி குறைவாகக் கொடுப்பதற்குக் காரணம் பிலிம் இறக்குமதி குறைந்து போனதன் காரணம் தான். எந்த அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களிடமிருந்து எந்தவிதமான புகாரும் வரவில்லை. அதனுல் இப்பொழுது கொடுக்கப்படுவது சரி என்று அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகத்தான் நினைக்கவேண்டியதாக இருக்கிறது.

Sri M. JAGANNATHAN : Are the Government aware of the fact that there is some discrimination shown in the distribution of raw films to film producers which has given rise to blackmarket operations?

The Hon. Sri R. VENKATARAMAN : No such complaints have been received by this Government.

Sri A. A. RASHEED : Are the Government aware that a lot of wastage occurs during shooting of films and if so, what steps have been taken by the Government to stop this wastage?

The Hon. Sri R. VENKATARAMAN : I wonder what the Government have got to do in this matter. If the people are wasting their films, they lose the quota in it.

Apprenticeship Training Scheme

Mr. SPEAKER. : கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. ஜி. மாணிக்கம் இடத்தில் இல்லாததால் 875 எண்ணுள்ள கேள்வியும் பதிலும் சட்ட சபை விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

*** 875 Q.—Sri P. G. MANICKAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா —

(அ) இந்திய சர்க்கார் உதவியோடு கூடி சென்னை சர்க்காரால் 1958-ம் வருஷக் கடைசியிலே ஆரம்பிக்கப்பட்ட தச்சு வேலை, வார்ப்பு

[18th March 1959

வேலை, பிட்டிங், வெல்டிங், டர்னிங் போன்ற தொழில்களிலே மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கக்கூடிய திட்டமானது சென்னை நகரிலுள்ள எந்தெந்த தனிப்பட்டவர்களுடைய தொழிற்சாலைகளிலே நடைபெறும் ?

(ஆ) இப் பயிற்சிக்காக எத்தனை பெயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(இ) இவர்களில், ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

(ஈ) இவர்களுக்கு எவ்வளவு காலத்துக்குப் பயிற்சியளிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*d*) A note[a] containing the information required is placed on the table of the **House.**

Potassium chlorate

* 876 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to open a factory for the manufacture of potassium chlorate in Tirunelveli district under the Second Five-Year Plan;

(*b*) if so, the estimated annual production; and

(*c*) when it is expected to commence?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is no proposal to establish a factory for the manufacture of potassium chlorate in the public sector under the Second Five-Year Plan. But the Government of India, on the recommendation of this Government, have granted a licence under the Industries(Development and Regulation) Act to Santha Chemicals, Limited to establish a factory at Ambasamudram in the Tirunelveli district, for the manufacture of potassium chlorate.

(*b*) 1,800 tons.

(*c*) We have no information, Sir.

Abolition of 'contract system'

* 877 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to abolish contract system in the Public Works Department and in other Government departments?

THE HON. SRI P. KAKKAN : The question of abolition of contracts in Public Works Department is under consideration of the Government.

SRI N. K. PALANISAMI : இதை ஒழிப்பதற்கு என்ன என்ன விதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : காண்டிராக்ட் முறையை ஒழிக்க வேண்டுமென்றால் என்ன என்ன விதத்தில் அது சாத்தியம் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

---

[a] Printed as Appendix V on pages 652 to 653 infra.